(எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 84/1986) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினோராம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 84/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் தீர்மானம்.

பேரவையை ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சார்பாக தீர்மானம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, a drastic situation requires a drastic remedy என்பார்கள். முள்ளை முள்ளால் எடுத்ததற்காக உங்களை பாராட்டி, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

---

* 24-11-86 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் முற்பகல் 11.22 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-1) துறையின் 4–9–1986 ஆம் நாளிட்ட 1691 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1986) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

170. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு சாராயக் கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 4–6–1986 ஆம் நாளிட்ட 666 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு சட்டம் 10/1986) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

171. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை. 1955 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1955) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ்—ஆங்கிலம்)

172. தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

42. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73 ஆம் ஆண்டிற்கான சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதும் தமிழக அரசின் கணக்குகளின் மீதும் பொதுக் கணக்குக் குழு (1977–78) அளித்த நான்காவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீதும் மற்றும் இருபதாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) அளித்துள்ள பரிந்துரைகளின் மீதும் அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை.

43. மாவட்ட நிர்வாகம் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (எட்டாவது சட்டமன்றப் பேரவை).